இயக்கவூர்தி விபத்து கோரிக்கை தீர்ப்பாயம், நாகப்பட்டினம்
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நாகப்பட்டினம்.

**MCOP.No.91/2024 ம.சா.1**

பெயர். திரு. பாலகந்தன் த/பெ. ராஜதுரை

கிராமம். நாகூர் Age: 46

நாள்.05.05.2026 தொழில். மேலாளர் மீன் கம்பெனி

நம்பர்.8270160138

**2026 –ஆம்** ஆண்டு மே மாதம் **05–ந்**தேதி **செவ்வாய்கிழமை** Act X of 1973 ஆண்டின் சட்ட விதிப்படி **திரு. G. கிருஷ்ணன், பி.ஏ., எல்எல்.பி.,** தலைமை நீதித்துறை நடுவர் நாகப்பட்டினம், ஆகிய என் முன்னால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

**3ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**.

நான் மீன் கம்பெனியில் மேலாளராக வேலைப்பார்த்து மாதம் ரூ.27,000/–ம் சம்பாதித்துவருகிறேன் என்பதை காட்டவுடம், எனது வயதை காட்டவும், நான் எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். கடந்த 17.02.2024ம் தேதி எனக்கு ஏற்பட்ட விபத்து குறித்து இரண்டு நாள் கழித்துதான் கடந்த 19.02.2024ம் தேதி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். விபத்து சமயத்தில் நான் ஓட்டி சென்ற TN 51 AF 1488 என்ற ஸ்பிளண்டர் பிளஸ் இருசக்கர வாகனம் எனக்கு சொந்தமானதுதான். அந்த இருசக்கர வாகனத்திற்கான பதிவு சான்றிதழ், காப்பீட்டு சான்றிதழ் அதை நான் விபத்து சமயத்தில் ஓட்டியதற்கான ஓட்டுனர் உரிமம், ஆகியவைகள் எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

இந்த விபத்தில் எனக்கு ஏற்பட்ட எலும்பு முறிவு காயமானது உரிய சிகிச்சைக்கு பின்னர் பூரண குணமாகிவிட்டது என்று சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தில் நான் தலைகவசம் அணிந்திருந்தால் எனக்கு தலை காயம் ஏற்பட்டிருக்காது என்றும், நான் தலைகவசம் அணியாததால்தான் எனக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. விபத்தில் நான் கீழே விழுந்தவுடன் நான் அணிந்திருந்த தலைகவசம் தனியாக போய்விட்டது, அதில்தான் எனக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. நான் வழக்கிற்காக விபத்து சமயத்தில் தலைகவசம் அணிந்தேன் என்று தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் நாளது தேதிவரை

வெளிநாயாளியாக சிகிச்சை பெற்று வருகிறேன் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் நாளது தேதிவரை வெளிநோயாளியாக சிகிச்சை பெற்று வருகிறேன் என்பதை காட்ட ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. மசாஆ.9, 11, 13, 14 வழக்கிற்காக தயார் செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. அதில் எந்தவிமான மருத்துவ குறிபோ மருத்துவர் கையொப்பமோ இல்லை என்று சொன்னால் சரியல்ல. அந்த ஆவணத்தின் மூலம் எந்தவித இழப்பீடும் கிடைக்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

விபத்து நடந்ததாக சொல்லப்படும் தம்பிதுரை பூங்கா சாலை பொதுவாக போக்குவரத்து நெரில் அதிகம் உள்ள சாலை என்றால் சரியல்ல. போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ள சாலையில் நான்தான் இருசக்கர வாகனத்தை அதிவேகமாக ஓட்டி சென்று திடீரென பிரேக் போட்டு இந்த விபத்தை ஏற்படுத்திக்கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. விபத்திற்கு நான் காரணம் என்பதை மறைத்து பெரிய வாகனமான டாடா ஏசி வாகனத்தின் ஓட்டுனர் மீது தவறான வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றும், அதன் அடிப்படையில் நான் கோரியுள்ள இந்த இழப்பீடு மனு 3ம் எதிர்மனுதாரரை பொறுத்து தள்ளுபடி செய்யவேண்டுமென்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்தினால் எனக்கு எந்தவித பொருளாதார இழப்பும், நிரந்தர இயலாமையும் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**